தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
பேரவைக்கு வைக்கப்பட்ட ஏடுகளில் ஒரு

(2008-2009)

(பதின்மூன்றாவது பேரவை)

எட்டாவது அறிக்கை

7 JUL 2009

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
(2008–2009)

(பதின்மூன்றாவது பேரவை)

எட்டாவது அறிக்கை

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டப்பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கம்
1. 2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2. முகவுரை	..	v
3. அறிக்கை	..	vii

இணைப்பு–1

1. வேளாண்மைத் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை	..	1–3
2. நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை	..	4–7
3. பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை	..	8–9

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	10

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2008 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. எஸ்.கே. வேதரத்தினம்

உறுப்பினர்கள்

திரு. இரா. இராம்பிரபு

திரு. பெ. கண்ணன்

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்

திரு. ம. அ. கலீலுர் ரஹ்மான்

திரு. எஸ். எஸ். குருசாமி

திரு. சை. சையது கௌஸ் பாஷா

திருமதி. எஸ். தேன்மொழி

திரு. இ. மகேந்திரன்

திரு. பெ.சு. விஜயகுமார்

திரு. ஞா. ஜாண் ஜோசப்

செயலகம்

திரு. மா. செல்வராஜ் : செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி : துணைச் செயலாளர்

திரு. சு. சந்திரன் : சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 2004–2005–ஆம் ஆண்டிற்கான 34–வது ஆண்டறிக்கை, 2004–2005–ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள், கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை, 2005–2006 மற்றும் 2006–2007–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை மற்றும் தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 2006–2007–ஆம் ஆண்டிற்கான 32–வது ஆண்டறிக்கை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2005–2006 மற்றும் 2006–2007–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2005–2006 மற்றும் 2006–2007–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் ஆகியவை காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டமைக் குறித்து சம்பந்தப்பட்டத் துறைகளின் அரசுச் செயலாளர்கள் 27.01.2009 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு காலதாமதத்திற்கான விளக்கத்தினை அளித்தனர். அரசு செயலாளர்கள் அளித்த விளக்கத்தின் மீதான எட்டாவது அறிக்கையை (2008–2009) குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. வேளாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின் அரசு செயலாளர்கள் அளித்த விளக்கத்தின் மீதான வரைவு அறிக்கையை குழு 25.02.2009 அன்று அறிக்கைக்கு குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்கு உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளருக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 009,
25.02.2009,
மாசி–13,
திருவள்ளுவராண்டு–2040.

எஸ்.கே. வேதரத்தினம்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2008–2009) 27.01.2009 அன்று நடைபெற்றக் குழுக் கூட்டத்தில், வேளாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை ஆகிய துறைகளின் கீழ் இயங்கும் கழகங்களின் ஆண்டுக் கணக்குகள் / ஆண்டறிக்கை / தணிக்கைக் கணக்குகளின் மீதான அறிக்கைகள் கால தாமதமாகப் பேரவைக்கு அளிக்கப்பட்டமைக்கான அத்துறை செயலாளர்களின் விளக்கத்தின் மீதான **2008–2009–ஆம் ஆண்டிற்கான குழுவின் எட்டாவது அறிக்கை.**

சென்னை–600 009,
25.02.2009,
மாசி–13,
திருவள்ளுவராண்டு–2040.

எஸ்.கே. வேதரத்தினம்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

வேளாண்மைத் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 34–வது ஆண்டறிக்கை	2004–2005	31.03.2006	04.08.2006	4 மாதங்கள் 3 நாட்கள்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள்	2004–2005	31.03.2006	18.08.2006	4 மாதங்கள் 17 நாட்கள்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை	2004–2005	31.03.2006	18.08.2006	4 மாதங்கள் 17 நாட்கள்
	2005–2006	31.03.2007	19.10.2007	6 மாதங்கள் 18 நாட்கள்
	2006–2007	31.03.2008	12.11.2008	7 மாதங்கள் 11 நாட்கள்
தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம்	2006–2007	31.03.2008	08.05.2008	1 மாதம் 7 நாட்கள்

துறையின் பதில்
(6)

வேளாண்மை உற்பத்தி ஆணையர் (மு) செயலாளர் எங்கள் துறையின் பொதுவாக ஆண்டறிக்கைகள் தாமதம் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் பல்கலைக் கழகத்தின் ஆண்டு அறிக்கையை ஆகும் நிகழ்வுகளில் அதற்கான காரண சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஆகியிருக்கிறது. இது போன்ற தவறுகள் காரியங்களைச் சுட்டிக்காட்டி கோப்பினை எதிர்காலத்தில் நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதாகவும், குழு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி

குழுவின் கருத்துரை
(7)

(6)–ன் தொடர்ச்சி

குறிப்பிடுகிற அறிக்கைகளை அவைக்கு அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து, இக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள கழக பதிவாளர் (ம) துணை வேந்தர் (பொறுப்பு) விளக்கினார். காலதாமதத்தை குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தற்போது 2008–2009–ஆம் ஆண்டறிக்கை குறித்த காலத்தில் அவைக்கு அளித்து விடுவதாகவும், தற்பொழுது கணக்குகள் மீதுள்ள தணிக்கை நடந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். இதற்கு காரணம் போதிய பணியாளர்கள் இல்லை என்றும் இந்த ஆண்டிற்கான அறிக்கையை காலதாமதமாகாமல் வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், கடந்த ஆண்டுகளுக்கான அறிக்கைகளை காலதாமதமாக வைத்தது குறித்து வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகவும் குழு சொல்கிற ஆலோசனைகளை மனதில் வைத்துக் கொள்வதாகவும் கழக பதிவாளர் தெரிவித்தார்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் தனது பதிலில் இதற்கான காரணத்தை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் (பொறுப்பு) அவர்கள் இது குறித்து விளக்கம் தெரிவித்துள்ளார் என குழுவின் முன் தெரிவித்தார். குழு சுட்டிக்காட்டியது போல ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஆகிவிட்டதால், அதற்கு துறை பொறுப்பு ஏற்பதாகவும், இதற்கு காரணம் 26 சம்பளம் வழங்கும் அதிகாரிகள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறார்கள் என குழுவின் முன் தெரிவித்தார். தணிக்கைக்கு ஆகஸ்ட் மாதம் கணக்குகளை தர வேண்டும் என்றும் அவர்கள் 75 இடங்களுக்கு போய் தங்கள் பணிகளை செய்ததில் தாமதம் ஏற்பட்டுவிட்டது. மேலும், இந்த விவரங்களை ஒருங்கிணைத்து அளிக்கும் பணியை

(7)–ன் தொடர்ச்சி

அவர்களின் ஒப்புதலைப் பெற்றுதான் குழுவிற்கு பதில் கொடுக்க வேண்டும். அப்போது தான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இந்த கால தாமதம் குறித்த தகவல் சென்றிருக்கிறது என்று குழுவின் உறுப்பினர்களுக்கு தெரிய வரும். அதனால் தான் இதை குழு வலியுறுத்துகிறது.

துறை தணிக்கை அறிக்கைகளுக்கு அமைச்சரின் ஒப்புதலை பெற்று அனுப்பியிருப்பதுபோல் அதே நடைமுறையை ஆண்டு கணக்குகளிலும் பின்பற்றப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. அதோடு குழுவிற்கு விளக்கம் அளிக்கும்போது உரிய படிவத்தில் அனைத்து Column–களையும் உரிய முறையில் உரிய விவரங்களோடு நிரப்பி குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என வலியுறுத்தியதோடு, தமிழ்நாடு வேளாண்மை

(6)–ன் தொடர்ச்சி

செய்ததில் மேலும் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது. தற்பொழுது இந்த பணியில் டபுள் என்ட்ரி என்ற புதிய சாப்ட்வேரை அறிமுகப்படுத்துவதாகவும், இது சம்பந்தமான விவரங்களை ஆன் லைன் முறையில் பதிவு செய்வதன் மூலம் விரைவாக பணிகளை செய்ய முடியும் என நம்புவதாகவும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் தெரிவித்தார். மேலும், கால தாமதம் ஏற்பட்டதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகவும் குழுவின் முன் தனது கருத்தினை தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் கால தாமதம் ஒரு மாதம் ஏழு நாட்கள் என்று அளவு குறைந்திருக்கிறது. அப்படி குறைந்திருப்பதினால் இனிவருகின்ற ஆண்டுகளில் கால தாமதம் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என குழு தனது கருத்தை வலியுறுத்தியது. அதற்கு பதிலளித்த பதிவாளர் மற்றும் துணை வேந்தர் (பொறுப்பு) டபுள் என்ட்ரி என்ற புதிய சாப்ட்வேர் தேவையாக இருந்தது என்றும், அதற்காக 3 இலட்சம் ரூபாய் செலவு செய்து இப்பொழுது வாங்குவதற்கு போர்டின் ஒப்புதலுடன் தொடங்க இருப்பதாகவும், அந்த பணி முடிவுற்றதும், வெளியிலே இருக்கிற ஆராய்ச்சி நிலையங்களிலே ஏற்படுகின்ற அன்றாட கணக்கு வழக்குகளை தலைமையிடத்தில் இருந்து கொண்டு உடனடியாக எடுத்துக் கொள்ள முடியும். அப்படி வரும்பொழுது இதுபோன்ற கால தாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காது எனக் குழுவின் முன் தனது கருத்தினை தெரிவித்தார்.

மேலும், 2007–08–ஆம் ஆண்டினுடைய ஆண்டறிக்கை குறித்து தணிக்கையின் முதல் கட்டம் முடிந்துவிட்டதாகவும், இதில் காலதாமதம் இருக்காது. விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என குழுவின் முன் சாட்சியம் அளித்தனர்.

(7)–ன் தொடர்ச்சி

பல்கலைக் கழகத்தின் 2004–2005 மற்றும் 2005–2006–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பேரவைமுன் வைத்ததிற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறை அளித்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்	2005–2006	31.03.2007	30.01.2008	9 மாதங்கள் 29 நாட்கள்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்	2006–2007	31.03.2008	25.04.2008	24 நாட்கள்

துறையின் பதில் (6)	குழுவின் கருத்துரை (7)
அரசு செயலாளர் 2005–06–ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் பேரவைக்கு அளித்ததில் சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அதாவது 13 மாதங்கள் தாமதமாகிவிட்டது. 2006–07–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை அளித்ததில் 3 மாதங்கள் தான் தாமதம் ஏற்பட்டது. ஆண்டு கணக்குகளை இறுதி செய்யும்போது அரசாங்கத்தில் ஒரு கடிதம் எதிர்பார்க்கிறார்கள். அதாவது குடிநீர் வடிகால் வாரியம் ஒவ்வொரு முறையும் நூற்றுவீதக் கட்டணம் (Centage Charges) நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கும் போது நூற்றுவீதக் கட்டணம் 13 சதவீதம் நிர்ணயிப்பார்கள். அந்த வருடத்தில் நூற்றுவீதக் கட்டணம் நிர்ணயம் செய்வதில் அரசால் தாமதமாகி அதன்பின் ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது. அவ்வாணை பெற்றப்பின்	2005–06 மற்றும் 2006–07–ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறை அளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

(6)–ன் தொடர்ச்சி

ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது. அவ்வாணை பெற்றப்பின் கணக்குகள் குடிநீர் வடிகால் வாரியத்தில் இறுதி செய்யப்பட்டு மாநில கணக்காயருக்கு அனுப்பப்படும். மாநில கணக்காயர் ஆய்வு செய்து திரும்ப அனுப்பியவுடன் கணக்குகள் சரிபார்த்ததாக குழு முன் தெரிவித்தார்.

நூற்றுவீதக் கட்டணம் செய்வது சம்பந்தமாக அரசு முடிவெடுப்பதில் கால தாமதமாகிவிட்டது. அதனால் கணக்குகள் குறித்து முடிவு செய்யும்போது தாமதமாகிவிடுகிறது. அதன் தொடர்ச்சியாக மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்புவதிலும் தாமதமாகிவிட்டது. 2005–2006–ஆம் வருடத்தின் ஆண்டறிக்கை தாக்கல் செய்ய 13 மாதங்கள் காலதாமதமாகிவிட்டது என துறைச் செயலாளர் தனது விளக்கத்தினை அளித்தார். இது குறித்து மேலும் விவரங்களை குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவிப்பார் என துறை செயலாளர் குழு முன் தெரிவித்தார்.

2005–2006–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை சென்ற வருடம், அதாவது 30.1.2008 அன்று பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் 2006–2007–ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை கடந்த 25.04.2008 அன்று பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2007–2008–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை கணக்குகளை பேரவையில் வைப்பதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கான பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மாநில கணக்காய்வுத் தலைவருடைய கருத்துகளை கொடுத்துவிட்டார்கள். அவை டெல்லியில் உள்ள C & AG அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அங்கிருந்து ஒப்புதல் கிடைத்தவுடன் விரைவில் பேரவையில் வைத்துவிடுவோம் என நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் குழுவின்முன் சாட்சியம் அளித்தார்.

(6)–ன் தொடர்ச்சி

குழு, ஆண்டறிக்கைகளை தாக்கல் செய்யும்போது காலதாமதம் ஏற்பட்டால் காலதாமத்திற்கான காரணம் சொல்வதற்கென்று ஒரு பகுதி உள்ளது. இது துறைக்குத் தெரியும். நிதித் துறை கடித எண்.2642/BPE/91-1 நாள் 30.1.1992–இல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

" The Administrative Departments concerned on receipt of printed copies of the Annual Accounts from the Corporations should fill up the relevant column in the delay statement if any. prepare the review note, obtain orders of the Minister concerned in circulation and should place it in the Assembly within one month from the date of receipt of printed copies of the Accounts at any cost."

ஆனால் 2005–06–ஆம் ஆண்டுக்கான காலதாமத அறிக்கையில் கலம் 1–ல் வீதவரவு குறித்த அரசாணை எதிர்பார்க்கப்படுவதாக துறை தெரிவித்துள்ளது. இவையாவும் நிர்வாக காரணத்தினால் ஏற்பட்ட தாமதமாகும். கலம் 3–(இ) மாநில கணக்காய்வு தலைவர் அலுவலகம் சம்பந்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. துறைக்கு சம்பந்தம் இல்லை என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது குழுவிற்கு அவ்வாறு தெரிவிக்கக் கூடாது எனவும், மாநில கணக்காய்வு தலைவர் அலுவலகத்திலிருந்து உரிய காலத்தில் பெறப்படாவிட்டால், அதனை பெற வேண்டியது துறையின் கடமை. ஆண்டறிக்கையை பேரவையில் சமர்ப்பிப்பது வரையில் துறை தான் அந்தப் பணியை ஏற்றுச் செய்ய வேண்டும் எனக் குழு வலியுறுத்தியபோது அரசுச்செயலாளர் காலதாமதத்திற்கென்று வகுக்கப்பட்டுள்ள கலத்தில் (Column) சரியான வார்த்தைகள் போடவில்லை என்பதால் அதற்காக வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் குழு முன் தெரிவித்தார். இனிவரும் காலங்களில் இதுமாதிரி

காலதாமதம் ஏற்பட்டால் சரியான வார்த்தைகளை உபயோகிக்கிறோம். இந்த வருட ஆண்டு கணக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படாது என குழுவின் முன் தனது கருத்தினை தெரிவித்தார்.

2006–2007–ஆம் ஆண்டுக்கான அறிக்கை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதம் 24 நாட்கள் ஆகும் என தவறாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2005–2006–ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் கூறியுள்ள காலதாமதம் துறையுடன் ஒத்துப்போகாததால், 13 மாதங்கள் என தவறாக செயலாளர் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால், ஒன்பது மாதங்கள் 29 நாட்கள் தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் 2006–2007–ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தாக்கல் செய்ய 3 மாதங்கள் காலதாமதம் என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் 24 நாட்கள் தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என குழு சுட்டிக்காட்டிய போது 2006–07 Accounts were submitted to Assembly on 25.4.2008 என குழுவின் முன் துறைச் செயலாளர் தனது கருத்தினை தெரிவித்தார். இதில் ஒன்றும் அதிக தாமதம் இல்லை என்றும் 2005–2006–ஆம் ஆண்டறிக்கை எப்பொழுது பேரவைக்கு அளிக்கப்பட்டது என குழு வினவிய போது 31.3.2007 அன்று வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 30.1.2008 அன்று தான் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனால் 9 மாதங்கள் 29 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது நடப்பு ஆண்டுக் கணக்குகள் தயார் ஆகிவிட்டன. காலதாமதமின்றி அதனை உடனே வைத்துவிடுவோம் என குழுவின் முன் துறைச் செயலாளர் சாட்சியம் அளித்தார்.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்	2005–2006	31.03.2007	22.10.2007	6 மாதங்கள் 21 நாட்கள்
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்	2006–2007	31.03.2008	23.04.2008	22 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் பேரவையில் காலதாமதமாக வைக்கப்பட்டதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறைச் செயலாளர் தான் பொறுப்பேற்க வேண்டும். Business Rules–படி அறிக்கையை கால தாமதமாக வைத்தால் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியவர் துறைச் செயலாளர்தான். இதற்கு முன்னால் இருந்த செயலாளர் துறை அமைச்சரிடம் அதற்கான ஒப்புதலைப் பெற்று விளக்கம் அனுப்புகிறேன் என்று சொல்லியிருப்பது எனக்கு தெரியாது. Business Rules–படி காலதாமதத்திற்கான காரணங்களை விளக்கி சட்டமன்றச் செயலகத்திற்கு துறைச் செயலாளர்தான் அனுப்ப வேண்டும். எனவே, இத்துறை அமைச்சரிடம் இந்த கோப்பு சுற்று அனுப்ப வேண்டிய அவசியமில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல காலதாமதம் இருந்தால் அதற்கு துறைச் செயலாளர்தான் அதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்

குழுவின் கருத்துரை
(7)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசியலமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்டது என்றும் அறிக்கை வைக்க கால நிர்ணயம் எதுவும் இல்லை என்றும், நிதித் துறையின் உத்தரவு அவர்களுக்குப் பொருந்தாது என்றும் துறைச் செயலாளர் சொல்கிறார்கள். அதனால் குழுவின் பரிந்துரையை ஏற்று அவர்கள் இனி வருங்காலங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சரின் இசைவைப் பெற்று சட்டப்பேரவைக்கு அறிக்கை தருமாறு அரசுச் செயலாளரை குழு வலியுறுத்தியது.

தேர்வாணையம் என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி தேர்வாணையத்தின் அறிக்கைகள் சட்டப் பேரவைக்கு அளிக்கப்படுகின்றனவே அல்லாமல் குறிப்பிட்ட கால அளவிற்குள் இந்த அறிக்கைகளை அவைக்கு அளிக்க வேண்டும் என்ற விதிகள் இல்லை. மேலும், நிதித்துறை அனுப்பியுள்ள கடிதமும், பொதுத் துறை நிறுவனங்களுக்கும் மற்றவற்றிக்கும் பொருந்துமே அல்லாமல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு பொருந்தாது என்பது எங்களுடைய கருத்து என அரசுச் செயலாளர் குழு முன் பதிலளித்தார்.

குறிப்பிட்ட அந்த படிவத்தை பூர்த்தி செய்து அந்தத் துறை அமைச்சரிடம் ஒப்புதல் வாங்கி சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று குழு வலியுறுத்தியதின் பேரில் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அறிக்கைக்கு விளக்கம் அளித்தது. தற்போது இருக்கும் செயலாளருக்கு முன் இருந்த வழிமுறை என்றும் இக்குழுவின் பரிந்துரையை ஏற்று இனிவரும் காலங்களில் அவ்வாறு செயல்படுத்தப்படும் என்றும் அது போல் காலதாமதம் வருங்காலங்களில் தாமதம் இருக்குமானால் அது சம்பந்தமாக விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பு துறைச் செயலாளருக்குத் தான் உள்ளது. இருப்பினும் குழு அறிவுரை வழங்கியுள்ளபடி இனிவருங்காலங்களில் காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறோம். அப்படி காலதாமதம் ஏற்பட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறோம் என அரசுச் செயலாளர் குழு முன் தெரிவித்தார்.

மேலும், 2005–2006 மற்றும் 2006–2007–ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டதற்கான காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்படலாம் என குழு முடிவு செய்தது.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

05.06.2008	சென்னை
24.07.2008	சென்னை
18.08.2008, 19.08.2008, 20.08.2008	கன்னியாகுமரி திருநெல்வேலி (குற்றாலம்)
27.01.2009	சென்னை

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS